## பிரிவு – 6

## உள்ளாட்சி நிருவாகத்தில் சமுதாயப் பங்கேற்பு

**4.6.01.** தனியொரு மனிதன், மத்திய மாநில அரசுகளின் கொள்கைகளால் பாதிப்படைவதைவிட, உள்ளாட்சி மன்ற நிருவாகத்தால்தான் நேரடியாக பெரிதும் பாதிப்படைகிறார். இந்த உள்ளூர் நிலையில்தான், ஒவ்வொருவருக்கும் தொடர்புடைய சாலைப் பராமரிப்பு, தெருவிளக்கு வசதி, குடிநீர் வழங்கல், போக்குவரத்து தகவல் தொடர்பு போன்ற பணிகளும், இதுபோன்ற ஏனைய பல்வகைப் பணிகளும் தொடர்புடையதாக இருக்கின்றன. பொது நிருவாகம் குறித்தக் கருத்து பொதுவானதாகத்தான் இருக்கிறது. நேரடித் தொடர்பு மூலமாகத்தான் இக்கருத்து ஒரு வடிவம் பெறுகின்றது. உள்ளாட்சி மன்ற நிருவாகத்துடனான மக்களின் தொடர்பு நெருக்கமானதாகவும் அடிக்கடி நிகழக்கூடியதாகவும் இருப்பதால், உள்ளூர் அளவில் பொது நிருவாகம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. உள்ளாட்சி மன்றங்கள், உள்ளூர் நிருவாகத்தின் மேம்பாட்டிற்குப் பாடுபடும் அதே வேளையில், பொது மக்களிடமிருந்து நல்ல ஒத்துழைப்பைப் பெருகின்ற அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**4.6.02.** மக்களின் கடமை, பாங்கான வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளோடு தொடர்புடையதாகும். குடியுரிமை என்பது கட்டாயமானதும் அதே நேரத்தில் தனியுரிமை வாய்ந்ததும் ஆகும். குடிமைப்பணிகளில் ஒருவரையொருவர் சார்ந்திருக்க வேண்டியதைப் பிரதிபலிக்கும் நடத்தை விதியைப் பின்பற்ற வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் கடமை. மக்கள் தொகை நெருக்கடி மிகுந்ததும் பலதரப்பட்ட மக்களைக் கொண்டதும் ஆன சமுதாயத்தில் இத்தகைய நடத்தை விதி மிகவும் இன்றியமையாததாகிறது. ஒருபுறம், குடிமைப் பணிகள் மேம்படுத்தப்படல் வேண்டும். மற்றொரு புறம் குடிமைப்பணி சார்ந்த நடவடிக்கைகளின் எதிர்மறையான மற்றும் நேர்மறையான அம்சங்கள் குறித்து உள்ளூர் மக்களுக்கு ஆர்வமூட்டி அவர்களை ஒருங்கு திரட்டுவதை நோக்கமாகக் கொண்டு அறிவுறுத்தல் இயக்கங்களை நடத்த வேண்டும். இதற்காக நாம் பயன்படுத்த வேண்டிய உத்திகளில் மிக முக்கியமானது தனிப்பட்டவர்களிடையேயும், நிருவனங்களிடையேயும் தலைமைப் பண்பை வளர்ப்பதுதான். இதனால் பல சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் உருவாகும்; ஒவ்வொரு உள்ளாட்சி மன்ற நிருவாகமும், இத்தகைய வளர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான, பொருத்தமான அமைப்புகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். உள்ளூர் நிலையில் ஒருவருடைய சொந்த சுற்றுச் சூழலையும், அழகுணர்வு, தொழில், பொழுதுபோக்கு சார்ந்த சூழலைப்பாதிக்கும் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுக்கும் உள்ளாட்சி மன்ற நிருவாகத்தில், மிகவும் பயனுள்ள வகையில் பங்காற்றுவதற்கு, தனிப்பட்டவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வழிவகைகளைக் காண்பதுதான் பிரச்சினை.

**4.6.03.** பொதுமக்களின் ஈடுபாடுகாரணமாக, உள்ளாட்சி மன்றத்திற்கு பின்வரும் பயன்கள் விளையலாம்:

(i) பொதுமக்களின் ஈடுபாட்டுடன் எடுக்கப்படும் முடிவுகள் முழுமையான சரியான தகவலை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்குமாகையால் அம்முடிவுகள் நல்ல தரமானவையாக இருக்கும். உள்ளூர் அலுவலர்கள் இறுதி முடிவுகளை எடுப்பதற்கு முன் பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டு அறிவது மாற்று வாய்ப்புகளைத் தெரிந்துகொள்ள உதவியாக அமையும்..

(ii) பொது மக்களின் ஈடுபாடானது, திட்ட செயல்பாட்டின் முன்னேற்றத்திற்குத் தடை ஏற்படுத்தக் கூடிய பிரச்சினைகள், இடையூறுகள் பற்றிய தகவல்களை அளித்து உள்ளாட்சி மன்ற அலுவலர்களை எச்சரிக்க உதவும். பணிகளின் தரத்தையும், அளவையும் பொதுமக்கள் கண்காணிக்கின்றனர் என்ற உணர்வு பணியாளர்களிடையே முறையாக சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் செயல்பாடு சீரடையும் என்பது இதனால் கிடைக்கும் மற்றொரு நன்மையாகும்.

(iii) பொதுமக்களின் ஈடுபாடு உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைமையை மேம்படுத்த உதவும். அரசு எடுக்கும் முடிவுகளில் எந்த அளவுக்கு அதிகமாக பொதுமக்களின் பங்கேற்பு இருக்கிறதோ அந்த அளவுக்கு, சமுதாயத்தின் நிதி ஆதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என்ற ஊக்கமும் அவர்களுக்கு உண்டாகிறது. சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய உதவும் என அவர்கள் அறியவருகிற திட்டப்பணிகளுக்கும், திட்டங்களுக்கும் பங்குத் தொகை அளிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் அவர்களிடையே அதிகரிக்கும்.

(i v) பொதுமக்களின் அதிக அளவு ஈடுபாடு, அண்டைப் பகுதி பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் அவர்கள் அப்பிரச்சினைகளைத் தீர்த்து கொள்ளத் தூண்டுதலாக அமைகிறது. எடுத்துக்காட்டாக, மக்களின் குடியிருப்புத் தேவையை நிறைவு செய்வதற்கு வடிவமைக்கப்பட்ட திட்டங்களை மேம்படுத்துவதிலும், செயல்படுத்துவதிலும் ஈடுபடுவதன் வாயிலாக பொதுமக்கள் வீட்டுவசதி குறித்த பிரச்சினைகளை அரசின் தலையீடின்றிச் சமாளிப்பதற்குரிய கூடுதல் வழிவகைகளைத் தெரிந்து கொள்கின்றனர். காலப்போக்கில், தங்களின் பிரச்சினைகளுக்குச் சுயமாகவே தீர்வு காணும் விருப்பார்வமும், திறமையும் பொதுமக்களிடையே உருவாவதைப் பொறுத்தே அண்டைப்பகுதியின் மேம்பாடு அமைகிறது.

**நகராட்சி நிருவாகத்தில் தொண்டு நிறுவனங்களின் பங்கு:**

**4.6.04.** நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்ற நிர்வாகம், அதற்கே உரிய சில தனிப்பட்ட பிரச்சினைகளிடையே செயல்பட வேண்டியுள்ளது. முதலாவதாக, குறைந்த பரப்பைக் கொண்ட பகுதியில், ஏராளமான மக்கள் வாழ்வதால், வாழ்க்கை முறையில் நெரிசல் தன்மை காணப்படுகிறது. குடிசைப் பகுதிகள் நகர்ப்பகுதி வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்த ஒரு பிரச்சினையாக விளங்குகிறது. இரண்டாவதாக, நகர்ப்பகுதி மக்கள் பலதரப்பட்ட வேலைகளிலும், தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். மூன்றாவதாக, நகர்ப்பகுதி மக்கள் அவர்களுடைய உரிமைகளையும், கடமைகளையும் உணர்ந்தவர்களாக இருக்கின்றனர். நான்காவதாக நகர்ப்பகுதியில் வாழ்வோர் ஒருவரைப் பற்றி ஒருவர் தெரிந்து கொள்ளாமலும், தொடர்பின்றியும் தனித்தனியாக வாழ்வதால் அவர்களிடையே வலுவான சமுதாய உணர்வுகளை ஏற்படுத்துவது கடினமாக உள்ளது. ஐந்தாவதாக நகர்ப்பகுதி வாழ்க்கை, அமைப்பு ரீதியிலான அடிப்படை குடிமைப்பணி வசதிகளைச் பெரிதும் சார்ந்தே உள்ளது.

**4.6.05.** ஆகவே அடிப்படை வசதிப் பணிகளின் தரத்தை மேம்படுத்த திட்டமிட்டுச் செயல்பட வேண்டியுள்ளது. நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்ற நிருவாகத்தில் மக்களின் ஈடுபாடும் பங்கேற்பும் இதற்கு உதவியாக இருக்கும். ஜனநாயக முறைப்படி அரசைத் தேர்ந்தெடுப்பது மட்டும் போதாது.

நகர்ப்பகுதி குறித்து திட்டமிடல் மற்றும் வளர்ச்சியில் சமுதாயப் பங்கேற்பு இருக்கும் வகையில் நிருவன அமைப்பை உருவாக்குவதும் அவசியம். நகர்ப்பகுதி வளர்ச்சியும் குடிமைப்பணிகளின் நிருவாகமும் வெற்றி பெறுவது மக்களின், குறிப்பாக ஏழை மக்களின் ஒத்துழைப்பையும் அவர்கள் தீவிரப் பங்கேற்பையும் பொறுத்தே உள்ளது.

**4.6.06.** வளர்ச்சித் திட்டங்களைக் கண்டறிதல், அவற்றைச் செயல்படுத்தல், பராமரித்தல் ஆகியவற்றில் சமுதாயத்தின் கீழ்மட்டத்திலுள்ள மக்களின் பங்கேற்புடன் சமுதாயச் சேவைகளை செய்வதற்கு, நகர்ப்பகுதி சமுதாய வளர்ச்சி ஒரு பயனுள்ள அணுகு முறையாக இருக்கும். ஒப்பிடத்தக்க அளவுக்கு குறைந்த செலவில், தெரிந்தெடுக்கப்பட்ட சமுதாயப்பணிகளை பரவலாக்கப்பட்ட முறையில் ஆற்ற இது பொருத்தமான அணுகுமுறையாகும். இது நகர்ப்பகுதி குறித்த திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்குத் தொடர்புடைய பிற துறைகளில் பின்பற்றத்தக்கதாகவும் உள்ளது. தற்போது சில காலமாக டில்லி, மும்பாய், கல்கத்தா, சென்னை, பரோடா, அகமதாபாத், ஜதராபாத், கான்பூர் மற்றும் இதர நகரங்களில் மத்திய சமுதாய நல வாரியம், பாரத சேவக் சமாஜ், அமெரிக்கன் பிரன்ட்ஸ் சர்வீஸ், போர்டு பவுண்டேசன், சுவீடிஷ் ஃஸ்வாலோஸ், லுத்தரன் சர்வீஸ், எக்ஸ்னோரா போன்ற அமைப்புகளும் அவற்றையொத்த ஏனைய முகவரமைப்புகளும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றி வருகின்றன. சென்னை மாநகராட்சிப்பகுதியில் “எக்ஸனோரா மெட்ராஸ்” என்ற மக்கள் இயக்கம், அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களை குடிமைப் பணிகளில் தீவிரமாக ஈடுபடச் செய்து பொதுத்தொண்டாற்றி வருகிறது.

**4.6.07.** பொதுவாக, சமுதாய நலத்திட்டங்கள் பாதிக்கப்பட்ட அல்லது பின்தங்கிய பகுதிகளிலும் குடிசைப்பகுதிகளிலுமே தொடங்கப்பட்டுள்ளன. பணியை நிருவகிப்பதிலும் , செயல்படுத்துவதிலும் வலுவானவர்களின் உதவி பொதுவாக ஒரு முக்கிய அம்சமாகிறது. அந்தந்தப் பகுதியின் சுற்றுப்புறச் சூழல் நிலைமைகளைச் சீர்ப்படுத்த, சாதாரணமாக, அப்பகுதி மக்கள் வெளியார் உதவியை நாடுகின்றனர். எனினும் தொண்டு நிறுவனங்களின் முனைப்பான பங்கேற்புடன் உள்ளூர் சமுதாயத்தினர் நகர்ப்பகுதி வளர்ச்சிப் பணிகளை சுயமாக ஏற்பாடு செய்து, பரஸ்பரம் ஒத்துழைப்பு நல்கி பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதில் அவர்களுக்குள்ள திறமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. திட்ட உருவாக்கத்தை சமுதாய மக்களே மேற்கொள்ள வேண்டும். பொது மக்கள் ஒன்று சேர்ந்து, தங்களுடைய சொந்தச் சுற்றுச் சூழலை மட்டுமல்லாது, சமூகச் சூழலையும் மேம்படுத்துவதற்குப் பாடுபடுவதற்கான முனைப்பான உதவிகளையும், தகுந்த வசதிகளையும் நகராட்சி மற்றும் மாநில அரசு அதிகாரிகள் அளித்து அப்பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். நகராட்சி மற்றும் அரசு அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு அளிப்பது நகர்ப்பகுதி சமுதாய மேம்பாட்டின் ஒரு அங்கமாகும். ஏனெனில், நகர்ப்பகுதி வாழ்க்கை முறையும் அதன் தேவைகளும், தொண்டு நிறுவனங்கள் மூலமாக தொண்டு மனப்பான்மை கொண்ட மக்களால் மட்டுமே செய்து முடிக்க இயலாத அளவுக்கு மிகவும் பிரம்மாண்டமானவையும் சிக்கலானவையும் ஆகும்.

**4.6.08.** சமுதாயப் பங்கேற்புடன் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வாய்ப்புள்ள துறைகளில் குடியிருப்புகள் கட்டுதல், சுகாதாரம், குடும்ப நலத் திட்டம், சிறப்புச்சத்துணவுத் திட்டங்கள், முறைசாரா – பாலர் பள்ளிக் கல்வி, திறமைகளை வளர்ப்பதற்கான பயிற்சி, பொருளாதார ஆதரவு, வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்குதல் சம்பந்தப்பட்ட திட்டங்களும், வளர்ச்சிப் பணிக் குழுக்கள், மகளிர் மன்றங்கள், நலப்பணி மன்றங்கள் அமைத்தல் முதலானவையும் மற்றும் சமுதாய நோக்கிலான சமூக பண்பாட்டு நடவடிக்கைகளும் அடங்கும்.

**4.6.09.** தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பின் மூலம் ஏழைகள் மற்றும் வாய்ப்பற்ற பிரிவினர்களை ஒருங்கு திரட்டி விட்டால் அவர்களைக் கொண்டு வளர்ச்சி பணிகளில் அதிகாரவர்க்கம்

தொழில் நுட்ப ஒப்பந்தக்காரர் தொடர்பைக் கட்டுப் படுத்த இயலும். போதிய அளவுக்கு விழிப்புடன் இருப்பதன்மூலம் அமைப்புரீதியான சமுதாய அமைப்பு, நிருவாக ஊழல்களையும் எதிர்த்து போராட இயலும். எனினும், இக்குறிக்கோள்களை எய்த இயலுமா என்பதும், எந்த அளவுக்கு எய்த இயலும் என்பதும் ,அடிப்படை ஜனநாயக அமைப்புகளான போட்டி அரசியல் முறை, பத்திரிகைகள் மற்றும் நீதித்துறை ஆகியவை செயல்பாட்டைப் பொறுத்துள்ளது.

**4.6.10.** சமுதாயப் பங்கேற்பு மூலமான நகர்ப்பகுதி சமுதாய மேம்பாட்டில் கிடைத்த அனுபவங்கள் சுய உதவி மற்றும், பரஸ்பர ஒத்துழைப்பில் சமூகத்தில் உள்ள மிக வறிய பிரிவினருக்கு பயிற்சியளிக்கும் பயனுள்ள ஒரு நடவடிக்கையாக இருக்கும் என்று உணர்த்துகின்றது. தொண்டு நடவடிக்கைகளுக்கும் சுற்றுச் சூழல் மேம்பாட்டுக்குமிடையேயும், அதே போன்று முறை சார்ந்த நகர்ப்பகுதி பொருளாதாரத் துறையில் வளர்ச்சிக்கான சமுதாய முயற்சிகளுக்கும், நிதியுதவி நிறுவனங்களுக்கும் இடையேயும் இருக்க வேண்டிய அடிப்படை பிணைப்பின் முக்கியத்துவம், நகர்ப்பகுதி சமுதாய வளர்ச்சி – நகர்ப்பகுதி அடிப்படை வசதிப் பணிகள் மூலமாகத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி நிருவாகத்தில் தொண்டு நிறுவனங்களின் பங்கு:**

**4.6.11.** புதிய பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் கீழ், ஊரக நிருவாகத்திலும் வளர்ச்சியிலும் அரசு சாரா மற்றும் சமூக அமைப்புகளுக்கும் சம அளவு முக்கியப் பங்கு உள்ளது. பஞ்சாயத்து ராஜ் போன்ற மக்களமைப்புகள் இருந்த போதிலும், துரதிருஷ்டவசமாக, மக்கள் வாக்களிக்கும் சமயம் தவிர, இதர தருணங்களில் தாங்களே முன்வந்து உள்ளூர் அமைப்புகளின் பணிகளில் பங்கேற்பதில்லை என்று பலமுறை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஒரு கிராமப் பகுதி அல்லது சமுதாய மேம்பாட்டுக்காகத் திட்டத்தை செயற்படுத்துவதில் அல்லது திட்டங்களை வகுப்பதில் மக்கள் பங்கேற்பது என்பது சமுதாயத்தில் அவர்களுக்கென்று உள்ள குறிப்பிட்ட பணியை ஒதுக்குவதைப் பொறுத்தே அமைகிறது. அவர்கள் எளிதில் பாதிக்கப்படக் கூடிய ஒரு சமுதாயத்தில் பங்கு வகிப்பவராக இருந்தால், அவர்களுடைய பங்கேற்பு வாய்ப்பு மிகவும் குறைவாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் தனியொரு நபரின் குறிப்பிட்ட நிலைமை என்னவாக இருந்த போதிலும், அவருடைய சொந்த வருவாயைக் கருத்திற் கொள்ளாமல் சமுதாயத்தில் அவரும் ஒரு நபர் என்ற முறையில் அவருடைய நிலை அங்கீகரிக்கப்படவேண்டும். அவ்வாறு செய்யப்பட்டாலன்றி, மற்றபடி மக்களுடைய பங்கேற்புக்கான வாய்ப்பு மிகக் குறைவே.

**4.6.12.** இதற்கு, தொண்டு அமைப்புகளும் அடிமட்ட நிலை பணிகளில் தீவிரமாகப் பங்கு கொள்ள வேண்டியது அவசியம். ஊரக வளர்ச்சித் திட்டங்களின் உத்தேச சீரமைப்பை அரசின் பொறுப்பில் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளின் பொறுப்பில் மட்டுமே விட்டு விடக்கூடாது. குறிப்பாக ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள சமூக செயல் குழுக்கள், அமைப்புகள் ஆகியவற்றின் பங்கு பணியும் இதில் கணிசமான அளவுக்கு இருக்க வேண்டும். அப்போதுதான், தொடர்புடைய அமைப்புகள் பதில் சொல்லும் பொறுப்பு உடையனவாக இருக்கும்.

**4.6.13.** மகப்பேறு மற்றும் குழந்தை நலப் பணிகள், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலப் பணிகள், வயது வந்தோர் கல்வி, சத்துணவு போன்ற இப்பணிகளை பொறுப்பான உள்ளூர் அமைப்பின் வாயிலாக செயல்படுத்துவது, மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திற்காக வகுக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் செயல்திறனை அதிகரிக்க பெரிதும் உதவும்.

**4.6.14.** ஊராட்சிகளின் பொறுப்புகளில் பின்வரும் பணிகளுக்கு சொற்ப அளவிலேயே தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.

குடிநீர் வழங்கல்

சமுதாய வானொலிப் பெட்டி வசதி

தொலைக்காட்சி வசதி

இவற்றை இயக்கி வைப்பதற்கும் நிறுத்துவதற்கும் மட்டுமே ஆட்கள் தேவைப்படுகின்றனர். கண் சிமிட்டும் நேரத்தில் அல்லது கைசொடுக்கும் நேரத்தில் இப்பணிகளைச் செய்துவிடலாம். இப்பணிகளுக்குக்கூட ஊராட்சிகள் ஆட்களை பணியிலமர்த்தி மதிப்பூதியமாக ஒரு குறைந்தளவு தொகையை அளிக்கின்றன. இப்பணியாளர்கள் பணியில் அவர்கள் செலுத்தும் நாட்டம் அவர்கள் வாங்கும் தொகைக்கு ஏற்றாற்போல்தான் இருக்கிறது. அவர்கள் ஊதியக் கொடை, வார விடுமுறை நாட்கள், சீருடைத் துணி போன்ற ஏனைய சில பயன்களையும் கோருகின்றனர். இவற்றை ஊராட்சிகளால் அளிக்க இயலவில்லை. இதனைத் தொண்டு நிறுவனங்களிடம் அல்லது சாரண சாரணியர் மற்றும் நாட்டு நலத்திட்டப் பணி போன்ற அமைப்புகளிடம் ஒப்படைப்பதுதான் இப்பணியைத் திருப்திகரமாகச் செய்வதற்கு ஏற்ற முறையாகும். இம்மாநிலத்தில் 12000 க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் இருப்பதால், மாநிலம் முழுவதும் கிளைகள் உள்ள தொண்டு நிறுயவனஙகள் இதற்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். சாரணர் மற்றும் நாட்டுநலத் திட்டப் பணி ஆகியவையும் இப்பணியைச் செய்வதற்குப் பொருத்தமான அமைப்புகளாகும். மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், கர்நாடகம் ஆகிய மாநில அரசுகள் சாரண அமைப்பை உரிய அளவுக்குப் பயன்படுத்தியுள்ளதுடன், கணிசமான அளவுக்கு நிதியுதவியும் அளித்துள்ளதால், அம்மாநிலங்களில் இந்த அமைப்பு நன்கு வேரூன்றியுள்ளது என்று அறியப்படுகிறது. தமிழ்நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் தொடக்கப் பள்ளியும், பெரிய கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப்பள்ளியும் உள்ளன. அனைத்துப் பள்ளிகளிலும் சாரணர் பிரிவு அமைக்கப்பட்டால், இப்பணிகளுக்கு இவர்களை பயன்படுத்திக் கொள்ளலாம். தற்போது சாரண சாரணியர் அமைப்புகளுக்கு அளிக்கப்படும் உதவி மானியத்தை அதிகரித்து, இயலுமிடங்களிலெல்லாம் இப்பணிகளை அவர்களிடம் ஒப்படைப்பது பற்றி மாநில அரசு கருதலாம். சாரண அமைப்பு நன்கு பயிற்சியளிக்கப்பட்ட அமைப்பு என்பதால், குடிநீர் ஆதாரங்கள் பகுதி, பேருந்து நிலையங்கள், வண்டிகள் நிறுத்துமிடங்கள், பொது அங்காடிகள் முதலியவற்றின் சுற்றுப்புறங்களைச் சுத்தப்படுத்துவதற்கு இவர்களின் பணியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தற்போது இவற்றைச் செய்வதற்கு ஊராட்சிகளில் தனி ஏற்பாடு ஏதுமில்லை. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் பாடத் திட்டங்களில் முக்கிய குடிமைப் பணிகளை உரியவாறு பராமரிப்பதன் அவசியம், அதில் மாணவர் மற்றும் மக்களின் பங்கு ஆகியவற்றை உணர்த்தும் பாடங்கள் சேர்க்கப்படவேண்டும்.

**4.6.15.** எனவே, மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

1. அனைத்து வளர்ச்சித் திடடங்களும் வெற்றி பெற்று தொடர்ந்து நடைபெற, சமுதாயத்தின் பங்கேற்பு மிக முக்கியமானதாகும். சமுதாயம், திட்டப்பணிகளைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பங்குகொள்வதோடு நின்றுவிடாமல் இயன்றளவு செலவுகளைப் பகிர்ந்து கொள்ளவும் வேண்டும். சமுதாயத்தை ஒருங்கு திரட்டவும், அதில் அதன் பங்குக்கேற்ப தக்க அமைப்புகளை உருவாக்கவும் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களால் தான் இயலும்; எனவே தொண்டு நிறுவனங்கள், சமுதாயத்தை ஒருங்கு திரட்டும் பணியில் மட்டுமல்லாமல், கொள்கை வகுத்தல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் ஆகியவற்றிலும் பங்கு கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

2. சமூதாய அடிப்படையிலான, அரசியல் சார்பற்ற, ஒதுக்கப்பட்ட மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டு, அம்மக்களோடு நெருங்கிய, பயனுள்ள இணக்கத்தைக் கொண்டுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு உரிய அங்கீகாரம் அளித்து, நகர் மற்றும் கிராமப் பகுதிகளில் அடிமட்ட மக்களின் நலனுக்கான திட்டங்களை திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும், நிருவகிப்பதிலும், பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

3. கிராமப்பகுதிகளிலும், நகர்ப்பகுதிகளிலும் உள்ளாட்சி அமைப்பு நிருவாகத்தில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமுதாய அமைப்புகள் அனைத்தையும் , உள்ளூர் பகுதிகளின் செயல் திட்டங்களை வகுப்பதிலும், திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும் ஈடுபடுத்தும் வகையில் பட்டியல் ஒன்று உடனடியாகத் தயாரிக்கப்படவேண்டும். திட்டம் வகுப்பது, செயல் பாட்டைக் கவனிப்பது போன்ற பணிகளுக்காக அமைக்கப்படும் பல்வேறு குழுக்களிலும் இவர்கள் பங்கு பெறலாம்.

4. அரசியல் அமைப்புச் சட்டத்தின் 74ம் திருத்தத்தில் வகை செய்யப் பட்டுள்ளவாறு நகர்ப் பகுதி வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் திட்டமிடுவதில், கீழ் மட்டத்திலிருந்து தொடங்கும் அணுகுமுறையைப் பின்பற்றி சமுதாய அளவில் மிகச் சிறு திட்டங்களிலிருந்து தொடங்கி நகர/மாவட்ட பெரு நகரத் திட்டங்களாக விரிவு படுத்த வேண்டும். மேலும் நகர்ப் பகுதி ஏழைகளுக்கான ஒட்டு மொத்த மாநகரத் திட்டம் ஒன்றையும் உருவாக்க வேண்டும்.

5. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும், வாய்ப்புள்ள இடங்களில் சாரணர் இயக்கம், தேசிய பணித் திட்டம் போன்ற அமைப்புகளையும், குடி நீர் வழங்கல், சாலைகள், தெரு விளக்கு வசதிகள் போன்ற சமுதாய அடிப்படை வசதிகளின் பராமரிப்பில் ஈடுபடுத்தலாம்.

6. முக்கியமான குடிமைப்பணிகளை முறையாகப் பராமரித்தல், மாணவர்களையும், பொதுமக்களையும் ஈடுபடுத்த வேண்டியதின் அவசியத்தை பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும்.